தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி – தேவகோட்டை.

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு – 2024, சிவகங்கை மாவட்டம்
## விடைக்குறிப்பு

**வகுப்பு: 11** **பாடம்: உயிரியல் விலங்கியல்**

==========================================================

| Q. NO | | MARK |
|---|---|---|
| 1 | அ) மையோஃபைப்ரில்கள் | 1 |
| 2 | ஈ) ஹைபோதலாமஸ் | 1 |
| 3 | ஆ) லைசோசைம் | 1 |
| 4 | இ) தைமஸ் சுரப்பி | 1 |
| 5 | இ) கேஸ்டரின் | 1 |

## SECTION - 2

**குறிப்பு: ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.** (3 x 2 = 6) 2 Marks

| Q.NO | ANSWERS | MARKS |
|---|---|---|
| 6 | **மர்புக்கூட்டை உருவாக்கும் விலா எலும்புகள்:**<br>**எலும்புகளின் பெயர்கள் மட்டும் ½ மதிப்பெண்**<br>1. **உண்மைவிலா எலும்புகள்:** முதல் 7 இணை விலா எலும்புகள்.<br>2. **போலி விலா எலும்புகள்:** 8, 9, 10 ஆவது இணை விலா எலும்புகள்.<br>3. **மிதக்கும் விலா எலும்புகள்:** 11 மற்றும் 12 ஆவது இணை | ½<br>½<br>½<br>(Total- 2) |
| 7 | **குருட்டுப்புள்ளி மையம்:**<br>1. கண்ணின் பின்முனையின் மையப்பகுதிக்குச் சற்றுக் கீழாக இரத்தக் குழாய்களும் பார்வைநரம்பும் கண்ணிற்குள்நுழைகின்றன.<br>2. **இப்பகுதியில் ஒளியுணர் செல்கள் கிடையாது.** எனவே இப்பகுதி குருட்டுப்புள்ளி என்று அழைக்கப்படுகிறது. | 1<br>1<br>(Total- 2) |
| 8 | **செவியின் இரண்டு பணிகள்:**<br>1. ஒலியை உணர்தல்,<br>2. சமநிலை பேணல் | 1<br>1<br>(Total- 2) |
| 9 | **உடல்சமநிலைப் பேணுதல்:**<br>1. பல்வேறு ஒருங்கிணைப்பு மண்டலங்கள் மூலம் உடலின் உட்புறச்சூழலை நிலையாக இருக்கச் செய்வதாகும். | 2<br>(Total- 2) |
| 10 | <br>**வரைபடம்: 1 மதிப்பெண்**<br>**ஏதேனும் 2 பாகங்கள்: 1 மதிப்பெண்** | (Total -2) |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## SECTION – 3

**குறிப்பு: ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி. வினா எண் 15 க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். 3 x3 = 9 (3 MARKS)**

<table>
<tr><th>Q.NO</th><th>ANSWERS</th><th>MARKS</th></tr>
<tr><td>11</td><td>
<table>
<tr><th>ஐசோடானிக் சுருக்கம்<br>(சம இழுவிசைச் சுருக்கம்)</th><th>ஐசோமெட்ரிக் சுருக்கம்<br>(சம நீளச் சுருக்கம்)</th></tr>
<tr><td>தசைகளின் நீளத்தில் மாற்றம் ஏற்படுகின்றது</td><td>தசையின் நீளத்தில் மாற்றமடைவதில்லை</td></tr>
<tr><td>இழுவிசையில் மாற்றம் ஏற்படுவதில்லை.</td><td>ஆனால் இழுவிசையில் மாற்றம் ஏற்படுகின்றது.</td></tr>
<tr><td>எ.கா. பளு தூக்குதல், மற்றும் டம்பெல்தூக்குதல்.</td><td>எ.கா. சுவரைக் கைகளால் தள்ளுதல், அதிக எடையுடைய பையைத்தாங்குதல்.</td></tr>
</table>
</td><td>1<br>1<br>1<br>(Total -3)</td></tr>
<tr><td>12</td><td>கார்னிய திசு நிராகரிப்பு:<br>1. ஒரு மனிதனிலிருந்து மற்றொரு மனிதனுக்கு குறைந்தநிராகரித்தல் அல்லது நிராகரித்தல் இல்லாத உடல் உறுப்பு மாற்றம் செய்யக்கூடிய ஒரேதிசு கார்னியாவாகும்.<br>2. இத்திசுவில் இரத்தக் குழாய்கள் இல்லாததே இதற்குக் காரணம்.</td><td>1<br>2<br>(Total -3)</td></tr>
<tr><td>13</td><td>கிருட்டினிசத்தின் அறிகுறிகள்:<br>1. குறைவானஎலும்புவளர்ச்சி,<br>2. பால் பண்பில் முதிர்ச்சியின்மை,<br>3. மனவளர்ச்சி குறைதல்,<br>4. தடித்த சுருங்கிய தோல்,<br>5. தடித்த துருத்திய நாக்கு,<br>6. உப்பிய முகம்,<br>7. குட்டையானதடித்த கை மற்றும் கால்<br>பிற அறிகுறிகள்,<br>1. குறைந்த அடிப்படைவளர்சிதை மாற்றவீதம்,<br>2. குறைந்த நாடித்துடிப்பு,<br>3. குறைந்த உடல் வெப்பநிலை,<br>4. இரத்தக் கொலஸ்டிரால் அளவு அதிகரிப்பு.</td><td>Any 3<br>(Total -3)</td></tr>
<tr><td>14</td><td>அட்ரீனல் கார்டெக்ஸ்ன் பகுதிகள்:<br>சோனா குளாமருலோசா: சுமார் 15% ½ + ½<br>➢ கார்டெக்ஸின் வெளிப்பகுதி. மெல்லியது.<br>➢ ஹார்மோன்: தாது கலந்த கார்டிகாய்டு.<br>சோனா ஃபாஸிகுலேட்டா – சுமார் 75% ½ + ½<br>➢ கார்டெக்ஸின் – நடுப்பகுதி – அகன்றது.<br>➢ ஹார்மோன்கள்: கார்டிசோல், கார்டிகோஸ்டீரோன், அட்ரினல் ஆன்ட்ரோஜன் மற்றும் எஸ்ட்ரோஜன்.<br>சோனா ரெடிகுலாரிஸ்: சுமார் 10% ½ + ½<br>➢ கார்டெக்ஸின் உட்பகுதி.<br>➢ ஹார்மோன்கள்: அட்ரினல் ஆன்ட்ரோஜன், குறைந்த அளவு எஸ்ட்ரோஜன் மற்றும் குளுக்கோ கார்டிகாய்டுகளைச் சுரக்கின்றது.</td><td>1<br>1<br>1<br>(Total-3)</td></tr>
<tr><td>15<br>கட்டாய வினா</td><td>மூளைசவ்வுகள்:<br>1. டியூராமேட்டர் – தடித்தவெளிப்புற உறை<br>2. பயாமேட்டர் – மூளையோடு ஒட்டியுள்ள உள் உறை உறை.<br>3. அரக்னாய்டு படலம் – இடையில் உள்ள மெல்லிய உறை.</td><td>1<br>1<br>1<br>(Total-3)</td></tr>
</table>



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## SECTION - 4

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** (1 x 5 = 5) 5 MARKS

| Q.NO | ANSWERS | MARKS |
|---|---|---|
| 16 | **தொடர் உடற் பயிற்சியினால் உருவாகும் நன்மைகள்:**<br>1. தசைகள் நீண்டு வளர்வதுடன் உறுதியாகின்றது.<br>2. இதயத்தசை ஓய்வு வீதம் குறைகின்றது.<br>3. தசைநார்களில் நொதிகளின் உற்பத்தி உயர்கின்றது.<br>4. தசைநார்கள் மற்றும் தசை நாண்கள் உறுதியடைகின்றன.<br>5. மூட்டுகள் மேலும் வளையும் தன்மையடைகின்றது.<br>6. மாரடைப்பிலிருந்து பாதுகாப்பு கிடைக்கின்றது.<br>7. ஹார்மோன்களின் செயல்பாட்டை அதிகரிக்கிறது.<br>8. அறிவாற்றல் தொடர்பான பணிகளை மேம்படுத்துகிறது.<br>9. உடல் பருமனைத் தடுக்கிறது.<br>10. தன்னம்பிக்கையையும் மரியாதையையும் அதிகரிக்கிறது.<br>11. நல்ல உடற்கட்டு அழகுப் பண்பைக் கூட்டும்.<br>12. தரமான வாழ்வுடன் ஒட்டு மொத்தமாக உடல் நலமடைகின்றது.<br>13. மன அழுத்தம், தகைப்பு மற்றும் பதட்டம் ஆகியவற்றைத் தடுகிறது. | ஏதேனும் 5<br><br>Total-5 |
| 17 | குச்சி மற்றும் கூம்பு செல்களின் வேறுபாடுகள் | |

| **குச்சி செல்கள்** | **கூம்பு செல்கள்** | MARKS |
|---|---|---|
| குறைந்த ஒளியில் பார்வைக்கு உதவுகின்றன. | நிறங்களை உணரப் பயன்படுகிறது, அதிக ஒளியில் சிறப்பாக வேலை செய்கின்றன. | 1 |
| நிறமி: ரொடாப்சின். | நிறமி: போட்டோப்சின். | 1 |
| ரொடாப்சின், 'ஸ்கோட்டோப்சின்' (Scotopsin) எனும் புரதமும் ரெட்டினால் என்னும் வைட்டமின் 'A' ஆல்டிஹைடும் இணைந்து உருவானது. | போட்டோப்சின் (Photopsin), ஆப்சின் எனும் புரதமும் ரெட்டினாலும் இணைந்து உருவானது. | 1 |
| விழித்திரையில் ஏறத்தாழ 120 மில்லியன் குச்சி செல்கள்உள்ளன. | விழித்திரையில் 6–7 மில்லியன் கூம்பு செல்கள்உள்ளன. | 1 |
| ஃபோவியாவை சூழ்ந்துள்ள பகுதியில் அதிகமாகக் காணப்படுகின்றன. | ஃபோவியா பகுதியில் அதிக செறிவுடன் காணப்படுகின்றன. | 1 |
| | | Total-5) |

பாரதிராஜா அ M.Sc., M.Ed., M.A., M.Phil., D.O.A
முதுகலை விலங்கியல் ஆசிரியர்,
தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி,
தேவகோட்டை.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com